**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 21.01.2026.**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>அசல் வழக்கு எண். 6/2024</u>**

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | குப்பன் | வயது | : | 63 |
| ஊர் | : | மாமண்டூர் | தொழில் | : | விவசாயம் |

**<u>வா.சா. 1 (ராஜேந்திரன்): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் இவ்வழக்கில் **வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது பிரமாணவாக்கு மூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்தேன். இன்று ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 23.05.1978 தேதியிட்ட கிரைய ஆவணம் இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 07.01.2024 தேதியிட்ட வாழ்முனியன் மற்றும் ராஜேந்திரன் பெயரில் இருக்கும் பட்டா எண் 167 இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 08.03.2023 தேதியிட்ட ராஜேந்திரன் என்பவரின் பெயரில் செலுத்தப்பட்ட சொத்துவரி ரசீது அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 11.03.2023 தேதியிட்ட ராஜேந்திரன் என்பவரின் பெயரில் செலுத்தப்பட்ட குடிநீர்க் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. ராஜேந்திரன் என்பவரின் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 13.07.2022 தேதியிட்ட வாதி சர்வேயர் துறைக்கு சொத்தினை அளப்பதற்காக செலுத்தப்பட்ட கட்டணத்தின் ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. வாதி சர்வேயர் துறைக்கு சொத்தினை அளப்பதற்காக அனுப்பப்பட்ட மனுவின் ஒப்புகை சீட்டு கணினி நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. சர்வே எண் 450/5ன் வழிகாட்டி மதிப்பு இணையம் மூலம் பெறப்பட்ட கணினி நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.01.21 15:38:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு